# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 1706/18 - 2011 මැයි 20 වැනි සිකුරාදා - 2011.05.20

*1706/18 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

*4 (2) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் கந்தே மொஹொட்டலாலகே சுனில் கந்தேதெர ஆகிய நான், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவினது காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2011, ஏப்பிறல் 01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் இங்கு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் நலனுக்கான பெறுமானமாகப் பயன்படுத்த வேண்டிய பெறுமதியை (2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறு) வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்புக்குட்பட்ட வகையில் இத்தால் நிர்ணயிக்கின்றேன்.*

*கந்தே மொஹொட்டலாலகே சுனில் கந்தேகெதர,*
*உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.*

*உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,*
*கொழும்பு 02,*
*2011, மே 13.*

**அட்டவணை**

*1. **தொழில்தருநர்களினால் வழங்கப்பட்ட கம்பனி பங்குகளின் பெறுமதி** : எவரேனும் தொழில் தருநர் ஒருவரின் ஊழியர் ஒருவருக்கு அல்லது அந்த ஊழியர் சார்பில் பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவருக்கு அத்தொழில் தருநரால் அல்லது அத்தொழில் தருநர் சார்பில் ஏதேனும் பங்குகளை ஒதுக்குவதன் மூலம் அல்லது கையேற்புச் செய்வதற்காக விருப்புத் தெரிவிப்பதன் மூலம் அத்தொழில் தருநரின் ஊழியருக்குச் சேர்கின்ற ஏதேனும் நன்மையின் "பெறுமானம்" எனக் கருதப்படுவது, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அத்தகைய பங்கொன்றை ஒதுக்கும் போது அல்லது பங்கினைக் கையளிக்கும் போது அல்லது விருப்பத்தை கைமாற்றம் செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குறித்த ஒதுக்கத்திற்கு அல்லது வெகுமதிக்கு அறவிடப்படும் தொகைக்கு மேலாக அப்பங்கிற்குரிய சந்தைப் பெறுமதியில் மிகையிருப்பின் அம்மிகையாகும் (நேரடியாக அல்லது விருப்பமொன்றினை பிரயோகிக்கும் பொழுது).*

*2. **தொழில்தருநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடமொன்றிலிருந்து பெறப்பட்ட நன்மைகளின் பெறுமதி** :*

*(அ) நிலைமைக்கு ஏற்றவாறு தொழில்தருனரினால் வழங்கப்பட்ட ஏதேனும் வாசஸ்தலத்தின் (4) (1) (ஈ) பிரிவுகளின் நோக்கத்திற்காக "வாடகைப் பெறுமதி" (அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்படாத பெறுமதியின் அடிப்படையில்) பின்வருமாறு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். :-*

*(i) சோலை வரி விதிக்கப்படாத பிரதேசமொன்றில் அமைந்துள்ளதொரு வாசஸ்தலமானவிடத்து மொத்த உழைப்பூதியத்தில் 10% அல்லது மாதமொன்றுக்கு 3,000 ரூபா ஆகிய இரண்டில் குறைந்த தொகை ;*

*(ii) தோட்டபங்களாக்கல் விடயத்தில் வாடகைப் பெறுமதியானது மொத்த உழைப்பூதியத்தில் 7.5% அல்லது மாதமொன்றுக்கு 2,000 ரூபா ஆகிய இரண்டில் குறைந்த தொகை.*

(ஆ) வாசஸ்தலங்களுக்காக தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளவிடத்து மொத்த உழைப்பூதியத்தில் 2.5% அல்லது மாதமொன்றுக்கு 1,500 ரூபா இரண்டில் குறைந்த பெறுமதி மேலே நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியுடன் சேர்க்கப்படல் வேண்டும் ;

(இ) ஊழியர் வதியும் வீடொன்று அல்லது வீட்டுத் தொகுதியொன்றுக்கான ஏதேனும் செலவு தொழில்தருநரால் மீளளிப்புச் செய்யப்படுமாயின் அந்த நன்மையின் பெறுமதியாக வேண்டிய தொழில் தருநரினால் மீளளிப்புச் செய்யப்பட்ட உண்மையான செலவாகும்.

3. **தொழில்தருநரினால் வழங்கப்பட்ட போக்குவரத்து வசதிகளின் பெறுமதி** :

(அ) 1,500 சி. சி. அல்லது அதற்கு அதிகமான சிலிண்டர் கொள்ளளவுடைய ஏதேனும் மோட்டார் வாகனத்தினை சொந்தப் பாவனைக்காக ஊழியர் ஒருவரினால் பயன்படுத்தும் பொழுது (முழுமையாக அல்லது பகுதியளவில்) ஊழியர் ஒருவரினால் பெறப்பட்ட நன்மையின் பெறுமதி :-

(i) அத்தகைய ஊழியருக்காக சாரதி மற்றும் எரிபொருள் தொழில்தருநரினால் வழங்கப்படுகின்ற பொழுது நன்மையின் பெறுமதி மாதமொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாவாகக் கருதப்படல் வேண்டும் ;

(ii) அத்தகைய ஊழியருக்காக சாரதி இல்லாமல் எரிபொருள் மட்டும் தொழில்தருநரினால் வழங்கப்படுகின்ற போது நன்மையின் பெறுமதி மாதமொன்றுக்கு முப்பத்தைந்தாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(iii) அத்தகைய ஊழியருக்காக சாரதி வழங்கப்பட்டு எரிபொருள் தொழில்தருநரினால் வழங்கப்படாத போது மாதமொன்றுக்கு முப்பதாயிரம் ரூபாவாக கருதப்படுதல் வேண்டும் ;

(iv) அத்தகைய ஊழியருக்காக சாரதி மற்றும் எரிபொருள் எதுவும் வழங்கப்படாது வாகனம் மாத்திரம் தொழில்தருநரினால் வழங்கப்படுகின்ற போது ; மாதமொன்றுக்கு பதினையாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) 1,500 சி. சி. இற்குக் குறைந்த சிலிண்டர் கொள்ளளவுடைய ஏதேனும் மோட்டார் வாகனத்தினை சொந்தப் பாவனைக்காக (முழுமையாக அல்லது பகுதியளவில்) ஊழியர் ஒருவரினால் பயன்படுத்தப்படுத்தும் பொழுது நன்மையின் பெறுமதி –

(i) அத்தகைய ஊழியருக்காக சாரதி மற்றும் எரிபொருள் தொழில்தருநரினால் வழங்கப்படுகின்றபோது நன்மையின் பெறுமதி, மாதமொன்றுக்கு முப்பத்தைந்தாயிரம் ரூபாவாகக் கருதப்படல் வேண்டும் ;

(ii) அத்தகைய ஊழியருக்காக சாரதி இல்லாமல் எரிபொருள் தொழில்தருநரினால் வழங்கப்படுகின்ற போது நன்மையின் பெறுமதி, மாதமொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(iii) அத்தகைய ஊழியருக்காக சாரதி வழங்கப்பட்டு எரிபொருள் தொழில்தருநரினால் வழங்கப்படாத போது நன்மையின் பெறுமதி ; மாதமொன்றுக்கு இருபதாயிரம் ரூபாவாக கருதப்படுதல் வேண்டும் ;

(iv) அத்தகைய ஊழியருக்காக சாரதி மற்றும் எரிபொருள் எதுவும் வழங்கப்படாது வாகனம் மாத்திரம் வழங்கப்படுகின்றபோது ; நன்மையின் பெறுமதி ; மாதமொன்றுக்கு பத்தாயிரம் ரூபாவாக கருதப்படுதல் வேண்டும் .

(இ) தொழில்தருநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் மோட்டார் சைக்கிள் ஊழியரின் தனிப்பட்ட பாவனைக்காக (முழுமையாக அல்லது பகுதியளவில்) பயன்படுத்தப்படும் பொழுது நன்மையின் பெறுமதி –

(i) அத்தகைய ஊழியருக்காக எரிபொருள் மட்டும் தொழில்தருநரினால் வழங்கப்படுகின்ற போது, நன்மையின் பெறுமதி மாமொன்றுக்கு ஐயாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும். (இயந்திரக் கொள்ளளவு கவனத்திற் கொள்ளப்படமாட்டாது ;

(ii) தொழில்தருநரினால் எரிபொருள் வழங்கப்படாத போது, நன்மையின் பெறுமதி மாதமொன்றுக்கு மூவாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும். (இயந்திரக் கொள்ளளவு கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஈ) தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தும் பொழுது நன்மையின் பெறுமதி -

(i) தொழில்தருநரினால் பிரயாணத்தின் சரியான பதிவு பேணப்படும் ஏதேனும் வாகனம் தொடர்பில் (இயந்திரக் கொள்ளளவு நோக்கப்படாது) கிலோ மீற்றரொன்றுக்கு பதினைந்து ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும் ;

(ii) தொழில்தருநரினால் பிரயாணத்தின் சரியான பதிவு பேணப்படும் ஏதேனும் மோட்டார் சைக்கிள் கிலோ மீற்றரொன்றுக்கு மூன்று ரூபாய்களாக இருக்க வேண்டுமென கருதப்படுதல் வேண்டும்.

(உ) தொழில்தருநர் ஒருவருக்கு ஊழியர் ஒருவருக்குச் சொந்தமான ஏதாவது மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள் தொடர்பில் ஏற்படும் எரிபொருள் அல்லது பராமரிப்புச் செலவு விடயத்தில் ஊழியரின் நன்மையின் பெறுமதியானது உண்மையில் ஏற்பட்ட செலவினம் அல்லது மீள அளிப்புச் செய்யப்பட்ட தொகையாகக் கருதப்படல் வேண்டும்.

**4. தொழில்நரினால் வழங்கப்பட்ட பிற நன்மைகள் :**

| | நன்மையின் தன்மை | நன்மையின் பெறுமானம் |
|---|---|---|
| 1. | வெளிநாட்டவர்களுக்கான ஹோட்டல் வசதியளித்தல் | இலங்கைக்கு வந்த திகதி தொடக்கம் முன்னைய 3 மாதங்களுக்கான செலவில் 25% உம் அதன் பின் 100% உம். |
| 2. | வேலையாட்களை வழங்கல் போன்றன | செலவில் 100% |
| 3. | மின்சாரம் மற்றும் எரிவாயு போன்ற ஏற்பாடு | செலவில் 100% |
| 4. | மருத்துவ நன்மைகளை அளித்தல் | |
| | (i) தொழில்தருநர் ஒன்றிணைந்த மருத்துவக் காப்புறுதி தவணைக் கட்டணத்தின் பங்களிப்பைச் செய்யும் போது | ஊழியருக்கு மீளளிப்புச் செய்யப்படுகின்ற மருத்துவப்பட்டியல்களின் 100% தொகை (மீளளிப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் பொறுப்பு ஏற்படல்) |
| | (ii) தொழில்தருநர் ஒவ்வொரு ஊழியரின் விடயத்திலும் தனித்தனியாக ஏதேனும் மருத்துவக் காப்புறுதிப் பூட்கையின் கீழ் பங்களிப்புச் செய்யும் போது, | குறித்த பங்களிப்புத் தொகை 100% |
| | (iii) தொழில்தருநரினால் மருத்துவச் செலவுச் சிட்டைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற போது மீளளிப்புச் செய்யப்படும் பொழுது. | குறித்த மருத்துவப்பட்டியல்களின் 100% |
| 5. | இலவச உணவு வழங்கல் | செலவில் 100% |
| 6. | ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணங்களை செலுத்துதல் | செலவில் 100% |
| 7. | தொலைபேசிக் கட்டணப் பட்டியல்கள் மற்றும் ஆண்டுக் கட்டணங்களை செலுத்துதல் | செலவில் 50% |
| 8. | விமான பயணச் சீட்டுக்கள் (விமானப் போக்குவரத்துக் கம்பனிகளின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயணச் சீட்டுக்கள் தவிர்ந்து) | செலவில் 100% |
| 9. | வரி செலுத்துதல் | செலுத்தப்பட்ட வரியின் அளவு (வரி அட்டவணை 6 இணைப் பார்க்கவும்). |

6- 104

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.